## கரோனா தடுப்பூசி மூலம் உலக அரங்கில்

# இந்தியாவின் பெருமையை உயர்த்தியவர் மோடி

- முதல்வர் பழனிசாமி பாராட்டு

■ சென்னை

கரோனா தடுப்பூசி மூலம் இந்தியாவின் பெருமையை உலக அரங்கில் பிரதமர் நரேந்திர மோடி உயர்த்தியுள்ளதாக முதல்வர் பழனிசாமி பாராட்டு தெரிவித்துள்ளார்.

தமிழக அரசின் சார்பில் புதிய திட்டங்கள் தொடக்க விழா, சென்னை நேரு உள் விளையாட்டரங்கில் நேற்று நடந்தது. இதில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார். விழாவில் முதல்வர் பழனிசாமி பேசியதாவது:

பிரதமர் மோடி வழிகாட்டுதலின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் உலக நாடுகளை ஒப்பிடுகையில் இந்தியாவில்தான் கரோனா தொற்று வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது. கரோனாவை முற்றிலும் வேரறுக்க, இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட தடுப்பூசிகளை மக்களுக்கு போடும் திட்டம் சிறந்த முறையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. நம் நாட்டில் தயாரிக்கப்படும் தடுப்பூசிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது மிகவும் பாராட்டுக்குரியது. இதன்மூலம் நாட்டின் பெருமையை உலக அளவில் வெகுவாக உயர்த்திய மோடிக்கு பாராட்டுக்கள்.

கரோனா ஊரடங்கால் தொய்வடைந்த நாட்டின் பொருளாதாரத்தை தனது துரித நடவடிக்கைகளால் வெகுவிரைவில் இயல்பு நிலைக்கு கொண்டு வந்த மோடியின் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை. சென்னை மாநகரத்தை உலகத் தரத்துக்கு மேம்படுத்த, பல்வேறு சிறப்பான உட்கட்டமைப்பு திட்டங்களை மறைந்த ஜெயலலிதா செயல்படுத்தினார்.

சென்னையில் போக்குவரத்து நெரிசல் மற்றும் பயண நேரத்தை குறைப்பதுடன், மக்கள் எளிமையாகவும், வசதியாகவும் பயணம் செய்ய தொலைநோக்கு பார்வையோடு மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்த தேவையான நிதி ஒதுக்கீடு செய்தார். அதனால், இன்று பல்வேறு வழித்தடப் பகுதிகளில் மெட்ரோ ரயில் சேவைகள் சிறப்பாக நடந்து வருகின்றன.

### கோவையில் மெட்ரோ ரயில்

சென்னை விமான நிலையத்துடன் முடிவடையும் மெட்ரோ ரயில் பாதையை, வண்டலூர் அருகே கிளாம்பாக்கத்தில் அமையவுள்ள புறநகர் பேருந்து நிலையம் வரை நீட்டிப்பு செய்வதற்கான சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. கோவையில் மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஆரம்பக்கட்ட ஆய்வுப் பணிகளும் நடந்து வருகின்றன.

இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ள கல்லணைக் கால்வாய் சீரமைப்பு திட்டத்தின் மூலம் அதிக பரப்பளவில் பயிர் சாகுபடி மேற்கொள்ளப்படும் என்பது உறுதி. நாட்டுக்கே முன்உதாரணமாக பல்வேறு நீர் மேலாண்மை திட்டங்களை அதிமுக அரசு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. இதனால் மத்திய ஜல்சக்தி அமைச்சகத்தால், நீர் மேலாண்மையில் சிறந்த மாநிலத்துக்கான விருது தமிழகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் பல்வேறு துறைகள் மூலம் தமிழகத்தில் பல திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. இன்னும் சில திட்டங்கள் தொடங்கப்பட உள்ளன.

இவ்வாறு முதல்வர் பழனிசாமி பேசினார்.